1974 ஏப்ரல் 2]

4. கவன ஈர்ப்பு.

(அ) கிருத்துவ 'பரவன்' வகுப்பு மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த கல்விச் சலுகைகள் நிறுத்தப்பட்டது குறித்து.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, சென்னை அரசாங்கக் கல்விச் சட்ட விதி எண் 92-ன் படி இதுவரை கிருஸ்துவ பரத குலத்தைச் சேர்ந்த தூத்துக்குடியிலுள்ள கல்லூரி மாணவர்கள் பெற்றுவந்த சலுகைகள் அரசால் ரத்து செய்யப்பட்டு இருப்பதால் அந்த மாணவர்கள் இதுவரை வாங்கியுள்ள பணத்தைத் திருப்பிக் கட்ட வேண்டிய நிலையிலும் தவறினால் பல்கலைக் கழகத் தேர்வில் கலந்துகொள்ள முடியாத நிலையிலும் உள்ள நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தமிழ்நாடு கல்வி விதிகளின் 92-வது விதியின்படி கன்னியாகுமரி மாவட்டம், செங்கோட்டை வட்டத்தைச் சார்ந்த 'பரவன்' வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஷெட்யூல் வகுப்பினர் பிரிவில் சேர்க்கப் பட்டுள்ளனர். அந்த வகுப்பைச் சேர்ந்தவர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினவராக இருந்தாலும் அவர்களுக்குக் கல்வி கட்டணச் சலுகை அவர்கள் ஷெட்யூல் வகுப்பினராக இருந்தால் எவ்வளவு அளிக்கப்படுமோ, அவ்வளவு அளிக்கப்படுகின்றது. தமிழ்நாட்டில் மற்ற இடத்தில் உள்ள 'பரவன்' வகுப்பைச் சேர்ந்தவர்கள், மிகவும் பின் தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். அந்த வகுப்பிலுள்ள கிறிஸ்தவ மதத்தினைச் சார்ந்தவர்களுக்கும் கல்வி கட்டணச் சலுகை உண்டு.

கல்வித் துறையின் விதிகளின்படி கல்விச் சலுகைகள் வழக்கப்பட்டாலும், சமூக நலத் துறையில் இதற்கென இடப்படும் ஆணையை ஒட்டித்தான் இக்கல்வி சலுகைகள் வழங்கப் படுகின்றன. சமூக நலத்துறையில் அரசு ஆணை 437, நாள் 15—5—1972-ல் 'பரவன்' குலம் மிகவும் பின்தங்கியவர் பட்டியலில் சேர்ந்திருந்தாலும் அவ்வகுப்பிலிருந்து கிறிஸ்தவ சமயத்திற்குச் சென்றவர்களுக்கு இச் சலுகை உண்டு என விளக்கம் இல்லாமையால் கல்வித் துறையின் கல்லூரிகளுக்கு தணிக்கையில் இவ் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களிடமிருந்து வந்த கடிதத்தின் மீது சமூக நலத் துறையினர்

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியருக்கு 9—3—1974-ல் விளக்கம் கொடுத்துள்ளனர். இது சம்பந்தமாக அரசு ஆணை 9, சமூக நலம், 3—1—1974-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையில் 'பரவன்' சமூகத்தைச் சார்ந்த கிறிஸ்தவர்களுக்கும் கல்விச் சலுகை 92-வது விதியின் படி முழுச் சலுகை பெற உரிமை உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விளக்க உரைக்குப் பின்பு மாணவர்களுக்குக் கல்விச் சலுகை வழங்கப் பெற்றதாக கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்து உள்ளார். இதன்படி தூத்துக்குடியிலுள்ள வ.உ.சி., காமராஜ் கல்லூரிகளில் 'பரவன்' சமூக கிறிஸ்தவ மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் கோருவது நிறுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இரயில் இணைப்புப் பாதைத் திட்டத்திற்காக குமரி மாவட்டத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கான இழப்பீடு நிலச் சொந்தக்காரர்களுக்கு கொடுக்கப்படாதது குறித்து.

திரு. எ. பாலையா : தலைவரவர்களே, திருநெல்வேலி—திருவனந்தபுரம் ரயில் இணைப்புப் பாதை ஏற்படுத்தும் திட்டத்திற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏராளமான நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வேலையும் தொடங்கப்பட்டு நீண்ட நாட்களாகியும் இதுவரையிலும் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்குரிய தொகையை நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை பொதுப்பணித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, திருநெல்வேலியிலிருந்து நாகர்கோவில் வழியாகத் திருவனந்தபுரத்திற்குப் பிராட்கேஜ் இருப்புப் பாதை அமைக்கவும், கன்னியாகுமரிக்குக் கிளைப் பாதை ஒன்று அமைக்கவும் இரயில்வே அமைச்சகம் (இரயில்வே வாரியம்) 1972, ஏப்ரலில் ஒப்புதல் வழங்கியது. இவ்வகையில், இடம் தொடர்பான இறுதி ஆய்வு முடிந்துவிட்டதென்றும், நிலம் கையகப்படுத்தும் பணியாளர்கள் இரயில்வே பணியாளர்கள் ஒத்துழைப்புடன் நிலம் கையகப்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளனர் என்றும் பாளையங்கோட்டை தலைமைப் பொறியாளர் (கட்டுமானம்) கூறியுள்ளார்.